## வகுப்பு - 8 - குடிமையியல்,
## 4. மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

**பயிற்சி வினாக்கள்:**

1. மனித உரிமை என்ற கருத்து ஆரம்பித்த இடம் ______.

   (1) இந்தியா (2) தமிழ்நாடு (3) ஐரோப்பா (4) சீனா

2. மனித உரிமை ஆவணங்களின் முன்னோடியாகக் கருதப்படும் ஆவணம்

   (1) அரசியல் சட்டங்கள் (2) மேக்ன கார்ட்டா

   (3) ஆங்கில உரிமைகள் மசோதா (4) ஐ.நா.மனித உரிமை ஆவணம்

3. மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பினை வெளியிட்ட அமைப்பு ?

   (1) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (2) சார்க் நாடுகள்

   (3) ஐரோப்பிய ஒன்றியம் (4) ஐக்கிய நாடுகள் சபை

4. மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?

   (1) 1945 (2) 1936 (3) 1949 (4) 1948

5. உலக மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படும் நாள் ______.

   (1) மார்ச் 8 (2) டிசம்பர் 1 (3) மே 1 (4) டிசம்பர் 10

6. உலகிலேயே அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட ஆவணம் ______.

   (1) அமெரிக்க அரசியல் சட்டம்

   (2) மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு

   (3) அனைத்துலக வர்த்தக ஒப்பந்தம்

   (4) ஹமுராபியின் தண்டனைச் சட்டங்கள்

7. ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்ட ஆண்டு ______.

   (1) 1917 (2) 1939 (3) 1945 (4) 1950

LIVEWORKSHEETS

8. மனித உரிமைப் பிரகடனத்திலுள்ள சட்டப்பிரிவுகளின் எண்ணிக்கை ______.

(1) 20 (2) 36 (3) 40 (4) 30

9. மனித உரிமையின் அடிப்படை மதிப்புகளாகக் கூறப்படுபவை ______.

(1) நீதி, நேர்மை, சட்டம் (2) சமூகநீதி, சகோதரத்துவம், சமதர்மம்

(3) சமத்துவம், சமதர்மம், நேர்மை (4) கண்ணியம், நீதி, சமத்துவம்

10. பின்வருவனவற்றுள் மனித உரிமையின் அடிப்படைப் பண்புகளில் சேராதது ?

(1) இவை அரசால் வழங்கப்படுபவை (2) மாற்ற முடியாதவை

(3) உலகளாவியவை (4) சார்புடையவை

11. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானது எது?

(1) மனித உரிமைகள் எப்போதும் தனிநபரிடமிருந்து பறிக்க முடியாதவை.

(2) ஒருவர் தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கு அரசின் அனுமதி வேண்டும்.

(3) ஒருவர் பேசும் கருத்து மற்றொருவரின் நலனுக்குத் தீங்கு விளைவிப்பதாக இருந்தால், அதனை மறுத்துப்பேச நமக்கு உரிமை உண்டு.

(4) குடும்பங்களில் ஆண் குழந்தைக்கு மட்டும் சிறப்புக் கவனம் செலுத்துவது மனித உரிமைக்கும் சமத்துவத்துக்கும் எதிரானது.

12. பின்வருவனவற்றுள் மனித உரிமைக்கு எதிரானது ______.

(1) கண்ணியமாக வாழ்தல். (2) சாதியின் பெயரால் இழிவுபடுத்துதல்.

(3) கருத்துச் சுதந்திரம் (4) பாகுபாடின்மை

13. நாடுகளுக்கும், அரசுகளின் கொள்கைகளுக்கும் ஏற்ப மனித உரிமைகள்

(1) அவ்வப்போது மாறுபவை. (2) மாறாதவை.

(3) நீக்கப்படுபவை. (4) நாட்டுக்கு நாடு வேறுபடுபவை.

14. The fullform of "UNIFEM" is

1. United Nations Development Fund for Wild animals.

2. United Nations Development Fund for Windmills.

LIVEWORKSHEETS

3. United Nations Development Fund for Women.

4. United Nations Development Fund for Wolves.

15. மனித உரிமை என்ற கருத்துக்குள் பொருந்தாதது ______.

(1) பேச்சுரிமை (2) வாழ்வதற்கான உரிமை

(3) குற்றத்துக்கு ஏற்ற தண்டனை (4) கட்டாயத் தொழிலாளர் முறை

16. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) மனித உரிமைகளின் வரையறை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

(2) அதிகாரத்தில் உள்ளோர் தம் விருப்பத்துக்கேற்ப வழங்குவதே சாமானியர்களின் வாழ்வுரிமை ஆகும்.

(3) குற்றம் சாட்டப்படும் ஒருவருக்குத் தன்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் மேல் நேர்மையான விசாரணை நடத்துமாறு கோர உரிமை உண்டு.

(4) காவல்துறையால் கைது செய்யப்படுபவர்கள் அனைவரும் குற்றவாளிகளே.

17. தேர்தலில் வாக்களிக்கும் உரிமை என்பது ______.

(1) கருத்துரிமை (2) வாழ்வதற்கான உரிமை

(3) அரசியல் உரிமை (4) புரட்சிக்கான உரிமை

18. மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக இருந்த எலினார் அம்மையாரின் கணவர் யார்?

(1) தியோடர் ரூஸ்வெல்ட் (2) பிராங்க்ளின் டி.ரூஸ்வெல்ட்

(3) ரூதர்போர்டு (3) பராக் ஒபாமா

19. சிவில் அல்லது வாழ்வியல் உரிமைகள் ______.

(1) நாட்டுக்கு நாடு வேறுபடும்.

(2) நாடுகளுக்கிடையே ஒப்பந்தங்கள் மூலம் நிர்ணயிக்கப்படும்.

(3) உலகம் முழுவதும் ஒரே மாதிரியானவை.

(4) இயற்கையாக அமையப் பெற்றவை..

20. UDHR என்பது ______.

LIVEWORKSHEETS

(1). பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதி அமைப்பு

(2). உலக மனித உரிமைகள் பிரகடனம்

(3). மாநில மனித உரிமைகள் ஆணையம்

(4). தேசிய மனித உரிமைகள் ஆணையம்

21. மனித உரிமையில் அடங்காதது ______.

(1) வழிபடும் உரிமை

(2) பொருளாதார உரிமை

(3) அனுமதியின்றி நாடுகளுக்கிடையே பயணிப்பது

(4) வாக்களிக்கும் உரிமை

22. இந்தியாவில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு

(1) 1991 (2) 1993 (3) 1965 (4) 1998

23. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

(1) மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

(2) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள்.

(3) ஐ.நா.சபையால் நியமிக்கப்படுகிறார்கள்.

(4) அரசு அதிகாரிகளால் நியமிக்கப்படுகிறார்கள்.

24. SHRC என்பது ________.

(1). பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதி அமைப்பு

(2). உலக மனித உரிமைகள் பிரகடனம்

(3). மாநில மனித உரிமைகள் ஆணையம்

(4). தேசிய மனித உரிமைகள் ஆணையம்

25. இந்தியாவில் மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக யார் தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

(1) மனித உரிமை செயற்பாட்டாளர்

LIVEWORKSHEETS

(2) ஓய்வுபெற்ற உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி

(3) குடியரசுத்தலைவர் விரும்பிய யாரேனும் ஒருவர்

(4) ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி

26. குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்யும் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு

(1) பிரிவு 246 (2) பிரிவு 356 (3) பிரிவு 24 (4) பிரிவு 45

27. மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரவும் முயற்சிக்கும் அரசு சாரா நிறுவனம் ______.

(1) யுனெஸ்கோ (2) செஞ்சிலுவைச் சங்கம்

(3) பீட்டா (4) ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்

28. பொருந்தாததைக் கண்டுபிடி.

(1) குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் (2) உலக சுகாதார நிறுவனம்

(3) மனித உரிமைகள் கண்காணிப்பகம் (4) ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்

29. குழந்தை என்ற வரையறைக்குள் வருபவர்கள் ______.

(1) 0-18 வயதுடையோர் (2) 0-14 வயதுடையோர்

(3) 0- 10 வயதுடையோர் (4) 0-21 வயதுடையோர்

30. ஐ.நா.சபையால் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டாக அறிவிக்கப்பட்ட ஆண்டு

(1) 1979 (2) 1989 (3) 2009 (4) 2019

31. கீழ்க்கண்டவற்றில் எந்த அமைப்பின் தலைவர் தேசிய மனித உரிமை ஆணையத்தில் நேரிணை உறுப்பினராக இல்லை?

(1) சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம்

(2) பட்டியல் சமூகத்திற்கான தேசிய ஆணையம்

(3) பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்

(4) மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய ஆணையம்

LIVEWORKSHEETS

32. 6 முதல் 14 வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக்கல்வி வழங்க வகை செய்யும் சட்டம் ______.

(1) குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டம்

(2) தொழிலாளர் நல உரிமைச் சட்டம்

(3) கல்வி உரிமைச் சட்டம்

(4) சிறார் நீதிச்சட்டம்

33. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க இயற்றப்பட்ட சட்டம்

(1) இந்திய தண்டனைச் சட்டம் (2) சிறார் நலன் சட்டம்

(3) தொழிலாளர் மேம்பாட்டுச் சட்டம் (4) போக்சோ சட்டம்

34. எந்த வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளைப் பணிக்கு அமர்த்துவது சட்டப்படிக் குற்றம்?

(1) 10 (2) 18 (3) 15 (4) 16

35. குழந்தைகளுக்கு எதிரான அநீதிகளைப் புகாரளிக்க உருவாக்கப்பட்ட உதவி மையத்தின் தொலைபேசி எண் ______.

(1) 108 (2) 101 (3) 1008 (4) 1098

LIVEWORKSHEETS